# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2055 • மே 25, 2024 Weekly E-paper • May 25, 2024


# ‘தேசத் தந்தை’யா சவுக்கு சங்கர் ?

சுப.வீரபாண்டியன்





## திராவிடப்பள்ளி முழுநாள் பயிற்சி வகுப்பு

## பயாலஜிகலா? பரமாத்மாவா?

தலையங்கம்

## ‘எச்சிலை’ – அறிவியலா? ஆன்மீகமா?

வெ.க.பரமேஸ்வரன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2055 • மே 25, 2024 Weekly E-paper • May 25, 2024


# ‘தேசத் தந்தை’யா சவுக்கு சங்கர் ?

**சுப.வீரபாண்டியன்**



மதுரை உயர்நீதிமன்றக் கிளையில், மிக வியப்பான ஒரு நீதிமன்ற நடைமுறையை நாம் பார்க்க நேர்ந்துள்ளது!

இது விடுமுறைக் காலம். வாரத்திற்கு இரண்டு முறைதான் நீதிமன்ற அமர்வுகள் இருக்கும். ஒன்று மனு அனுமதிக்காக (admission). இன்னொன்று மனுக்கள் மீதான விசாரணைக்காக!

நேற்று முன்தினம் விசாரணைக்காக மதுரை உயர்நீதிமன்ற கிளையில் 40 வழக்குகள் வந்துள்ளன. அவற்றுள் 15 வழக்குகள் குண்டர் சட்டத்தை ரத்து செய்யுமாறு கேட்டு வந்தவை.

முதல் 14 மனுக்களை, நீதிபதிகள் ஜி .ஆர் . சுவாமிநாதன், பி. பி. பாலாஜி இருவரும் ஒத்தி வைத்து விட்டனர். அரசின் பதில் மனு வந்த பிறகு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று கூறினர். ஆனால் 15 ஆவது மனுவை மட்டும் உடனே விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாகவும், மதியம் 2.30 மணிக்குள் எல்லா ஆவணங்களையும் அரசு ஒப்படைக்க வேண்டும் என்றும் நீதிபதி ஜி ஆர் சுவாமிநாதன் ஆணையிட்டார். அந்த மனு சவுக்கு சங்கருக்காக அவருடைய தாயார் கொடுத்திருந்த ஒன்று.

14 மனுக்களை முறைப்படி தள்ளி வைத்த உயர் நீதிமன்றம், சவுக்கு சங்கர் தொடர்பான மனுவை மட்டும் ஏன் உடனே எடுத்துக் கொண்டது என்பது நம்மைப் போன்ற பாமரர்களுக்குப் புரியவில்லை. ஒருவேளை காந்தியாருக்கு அடுத்து உருவாகி இருக்கும் இரண்டாவது 'தேசத் தந்தை" யாக சவுக்கு சங்கர் இருப்பாரோ என்று எண்ணத் தோன்றியது.

நீதியரசர் சுவாமிநாதன், தான் சொன்னபடி மதியமே வழக்கை எடுத்துக் குண்டர் சட்டத்தை ரத்து செய்வதாகவும் சொல்லிவிட்டார். ஆனால் அந்த அமர்வில் உடன் இருந்த இன்னொரு நீதிபதி பாலாஜி அவர்கள் அதனை ஏற்கவில்லை. அரசின் பதில் வந்த பிறகுதான் தீர்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்று கூறினார். அதனால் இப்போது அந்த வழக்கு, மூன்றாவது நீதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இவ்வளவு அவசரம் அவசரமாகச் சவுக்கு சங்கர் வழக்கை எடுத்துக் கொள்ள வேண்டிய - எடுத்துக் கொண்டு தீர்ப்பும் வழங்கிட வேண்டிய கட்டாயம் என்ன வந்தது? இதற்கு நம் மதிப்பிற்குரிய நீதிபதி சுவாமிநாதன் அவர்கள், நீதிமன்றத்திலேயே விடையும் சொல்லிவிட்டார்.

சமூகத்தில் உயர்ந்த இடத்தில் இருக்கக்கூடிய இருவர், நீதிபதியவர்களை அவர் அறையில் தனியாகச் சந்தித்து, இந்த வழக்கை அவசரமாக எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்களாம். எனவே அவர் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், உடனே எடுத்துத் தீர்ப்பும் சொல்லிவிட்டாராம்.

இப்போது நமக்கு இரண்டு கேள்விகள் எழுகின்றன. தனிப்பட்ட முறையில் நீதிபதி அவர்களை, அவர் அறையில் தனியாகச் சந்தித்து, நீதிமன்ற நடைமுறையில் குறுக்கிட்டு, தங்கள் செல்வாக்கைச் செலுத்தி, நீதிபதிக்கே யோசனை அல்லது மிரட்டல் கொடுத்த அந்த இரண்டு பேர் யார்? அவர்களின் பெயர்களை நீதிபதி ஏன் வெளிப்படையாகச் சொல்லவில்லை? அவர்கள் மீது ஏன் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை?

நமக்கு இன்னொரு கேள்வியும் தோன்றுகிறது. இரண்டு பேர் தனியாகச் சந்தித்து வழக்கை எடுக்காதீர்கள் என்று சொன்னதற்காக, அதனை அவர் கையில் எடுப்பார் என்றால், இனி அடுத்தடுத்த வழக்குகளில் இரண்டு பேர் தனியாகச் சந்தித்து குறிப்பிட்ட இந்த வழக்கை எடுக்க வேண்டும் என்று சொன்னால் அல்லது மிரட்டினால், உடனடியாக நீதிபதி விசாரணையை நிறுத்தி விடுவாரா?

நீதிமன்ற நடைமுறை என்பது, நீதிபதியைத் தனியாகச் சந்தித்து யாரோ சிலர், என்ன சொல்கிறார்கள் என்பதைப் பொறுத்துத்தான் அமையுமா என்பதும் நம் போன்ற பாமரர்களுக்குப் புரியவில்லை!

மாண்பமை நீதிபதியவர்கள் நம்மைப் போன்ற எளியவர்களின் இந்த ஐயங்களுக்கு விடை தந்து, நீதியைக் காப்பாற்றுவார் என்று நம்புவோமாக!

திராவிடப்பள்ளி

# திராவிடப்பள்ளி

## முழுநாள் பயிற்சி வகுப்பு













19.05.24 அன்று காலை 9.30 மணிக்குத் தொடங்கி, மாலை 6:00 மணி வரையில் சென்னை தேனாம்பேட்டை அன்பகத்தில், திராவிடப் பள்ளி மாணவர்களுடன் ஒரு சந்திப்பு நிகழ்த்தப்பட்டது.

தோழர் உமாபதி தலைமையில், தோழர்கள் அருள்மொழி, இந்திரகுமார் ஆகியோர் காலை அமர்விலும், மாலை அமர்வில் திராவிடப் பள்ளி நிறுவுநர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்களும் வகுப்புகள் எடுத்தனர்.

தோழர்கள் கார்த்திக், வெற்றிச்செல்வன், அறம் மதி, லோக பாலன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். திராவிடப் பள்ளி மாணவர்கள் பெருமளவில் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர்.

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## பயாலஜிகலா? பரமாத்மாவா?

ஒடிசா மாநில பாஜக தலைவர்களுள் ஒருவரான சம்பித் பத்ரா, "பூரி ஜெகன்நாதர் கடவுளே எங்கள் மோடியின் பக்தர்தான்" என்று அண்மையில் பேசி, பிறகு மன்னிப்பும் கேட்டுக் கொண்டார். மன்னிப்பு என்பதெல்லாம் அவர்களின் வாடிக்கையான கதைதான்.

ஆனால் பிரதமர் மோடி, சம்பித் பத்ராவையும் மிஞ்சி ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில் "என்னை இந்த உலகிற்கு அனுப்பியது பரமாத்மாதான். பயாலஜிக்கலாக நான் பிறந்திருக்க வாய்ப்பில்லை. 'ஏதோவொரு விஷயத்தை'நடத்தியே ஆக வேண்டும் என்பதற்காகவே, கடவுள் என்னை இந்த பூமிக்கு அனுப்பியிருக்கிறார்" என்று கூறியிருக்கிறார் பிரதமர் மோடி.

இப்படித்தான் நித்தியானந்தா என்று ஒருவர் கைலாசா என்ற நாட்டின் 'அதிபர்' என்று சொல்லிக் கொண்டு வித்தை எல்லாம் காட்டிக்கொண்டு இருந்தார் - இப்பொழுது, மோடி!

அந்த பரமாத்மாவால் அனுப்பப்பட்ட மோடி 'ஏதோவொரு விஷயத்தை' நடத்தியே ஆக வேண்டும் என்பதற்காக, கடவுள் அவரை இந்த பூமிக்கு அனுப்பியிருக்கிறார்" என்று சொன்னார் அல்லவா!

அது என்ன விஷயம்?

அரசுப் பொது நிறுவனங்களை எல்லாம் தனியாருக்குத் தாரைவார்த்தாரே, அதுவா?

திடீரென்று ஒருநாள் பணமதிப்பிழப்பு என்று சொல்லி மக்களைப் பாடாய்ப் படுத்தினாரே, அதுவா?

நீட்தேர்வு, நுழைவுத்தேர்வு, பெற்றோல் டீசல், சமையல் எரிவாயு உள்ளிட்ட பொருள்களின் விலையேற்றம், அதுவாக இருக்குமோ!

அல்லது பீகாரில் போய், பூரி கோயிலின் 'புதையல்' இருக்கும் அறையின சாவி தமிழ்நாட்டுக்குப் போய்விட்டது என்று ஒரு கதை சொன்னாரே அதுவாக இருக்குமோ!

தமிழருக்கு எதிராகவும், சிறுபான்மையினர் - இஸ்லாமியருக்கும், எதிராகவும் இனவாதம் பேசி வருகிறாரே!

இதுபோன்ற விஷயத்தை நடத்தியே ஆகவேண்டும் என்பதற்காகத்தான் அந்த பரமாத்தா மோடியை அனுப்பினார் போலத் தெரிகிறது.

இந்த விஸ்வகுருவின் அடுத்த வேடம் 'பிரம்ம ரிஷியாக '

இருந்தாலும் இருக்கும்! ஒரு பிரதமர் எப்படி இருக்க வேண்டும் என்பதல்ல, எப்படி இருக்கக் கூடாது என்பதற்கு மோடியைத் தவிர வேறு யாரைத்தான் சொல்ல முடியும்!

# ஐயா இராம. சுப்பையா
## அவர்களின்
# நினைவு நாள்
# 21-05-1997



அன்றைய இருளின் ஒளியே - என்
அரசியல் வாழ்வின் வழியே!
மண்ணில் திராவிடம் நிலைக்க - உம்
மகன்நான் என்றும் உழைப்பேன்!!

– சுப.வீரபாண்டியன்.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,
தொலைபேசி: 044-2472 6408

# ‘எச்சிலை’ - அறிவியலா? ஆன்மீகமா?

வெ.க.பரமேஸ்வரன் (திராவிடப் பள்ளி மாணவர்)

"மானமும் அறிவும் மனிதருக்கு அழகு" என்னும் பெரியாரியச் சிந்தனைகள் விதைக்கப்பட்ட மண்ணில் மனிதநேயத்தையும், பொது சுகாதாரத்தையும் கேள்விக்குள்ளாக்கும் ஒரு தீர்ப்பை நீதிபதி திரு.ஜீ.ஆர். சுவாமிநாதன் வழங்கியுள்ளார்.

120 வருட பழக்கம் என்றும், நம்பிக்கை என்றும் எச்சில் இலையில் மனிதன் அங்கப்பிரதட்சணம் (படுத்து உருளலாம்) என்று சட்டம் வாயிலாக அநாகரிகச் செயலுக்கு அனுமதியளிக்கும் தீர்ப்பை வழங்கியுள்ளார். கரூர் மாவட்டம் மணிமங்கலம் அருகே நெரூர் அக்ரஹாரத்தில் சத்குரு சதாசிவ பிரமேந்திரரின் ஜீவசமாதியில் நடந்துள்ள இச்சம்பவம் மனித சமூகத்தின் மீது படிந்த இழிவு.

நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் வழக்கை விசாரித்து 2015-ல் கொடுத்த தீர்ப்பில் அனைத்துத் தரப்பும் விசாரிக்கப் படவில்லை என்றும், மேலும் இது போன்ற மதச் சடங்குகளுக்கு அதிகாரிகளிடம் அனுமதி பெறத் தேவையில்லை என்றும் தனது 39 பக்கத் தீர்ப்பை 17.05.2024 அன்று அளித்துள்ளார். இந்த இழிவான சடங்கின் தொன்மையைக் கூறுவதாக மகாபாரதத்தில் இதுபோன்ற ஒரு சடங்கு உள்ளதாக இந்தச் சடங்கிற்கு நியாயம் கற்பித்துள்ளார்.



சபரிமலையில் மேற்கொள்ளப்படும் அங்கப் பிரதட்சணம் பற்றியும் மேற்கோள் காட்டி இந்தச் சடங்கிற்கு அனுமதியளித்துள்ளார் அவர். 17ம் நூற்றாண்டில் மராத்திய சாம்ராஜ்யத்தில் தாழ்த்தப் பட்டோரின் எச்சில் தரையில் பட்டால் தீட்டு எனக்கூறி கழுத்தில் மண்கலயத்தை சுமந்துவரச் செய்த இதே சனாதன பிராமணவாதிகள் இன்றும் மனித நேயத்தை அடியோடு மறுக்கும் இச்செயலை தனிமனித உரிமை (இந்திய அரசியலமைப்பில் பிரிவு 21) எனக்கூறி அடிப்படை உரிமைகளுக்கு ஆன்மிக நோக்கு உள்ளது எனக்கூறி தீர்ப்பும் பெற்று இந்த நாகரிகமற்ற செயலை நடத்தியுள்ளனர். இந்தத் தீர்ப்பை படிக்கும் நமக்குச் சில கேள்விகள் மனதில் எழலாம்

1) இந்த இழிசெயல் மனிதத்தன்மையோடு உள்ளதா? இதனை சுயமரியாதையோடு உள்ள மனிதன் ஏற்பானா?

2) உணவுப் பந்திகளில் இலை எடுப்பதை ஒரு தயக்கத்தோடும், தாழ்வோடும் அணுகும் இச்சமூகம் இந்த இழிசெயலை மதம் என்னும் பெயரில் அங்கீகரிக்குமா?

3) கொரோனா போன்று பல விசக்கிருமிகள் எச்சில் மூலம் காற்றில் பரவக்கூடிய பயம் இருக்கும் இக்காலத்தில் பொதுச்சுகாதாரத்திற்கு எதிரான இச்செயலை மனிதசமூகம் ஏற்குமா?

4) நம்பிக்கை என்றும் தனிமனித அடிப்படை உரிமை என்றும் எழுதப்பட்டிருக்கும் இச்சட்டம் மேலும் தீண்டாமை,குழந்தை திருமணம், சதிவழக்கம்,விதவை மறுமணம் ஆகிய சமூக தீமைகளை மீண்டும் சமூகத்தில் நிலைப்பெறச் செய்துவிடாதா?

பெரியார் தொலைநோக்குப் பார்வை உடையவர். அதனால் தான் மதம்,சாதி காப்பாற்றப்படும் சட்டப்பிரிவுகளை அப்போதே கண்டறிந்து திருத்தம் வேண்டும் என்றார்.

இந்திய அரசியலமைப்பு உட்பிரிவுகளான 13(2),25(1),26,29(1),(2),368 மதத்தை, சாதியைப் பாதுகாக்கின்ற முறையில் பயன்படுத்தக் கூடும். எனவே தீண்டாமை ஒழிப்பு போன்று சாதி ஒழிப்பை பிரதானமாக கொண்டு அரசியலமைப்பு திருத்தப்பட வேண்டும், இல்லையேல் இந்திய அரசியலமைப்புச் சட்ட நகல் எரிக்கப்படும் என்று 1957 நவம்பர் மாதம் இந்திய அரசிற்கு எச்சரிக்கை விடுத்தார்.

ஆதிக்க இந்துக்களால் ஆன இந்திய அமைச்சரவையில் பெரியாரின் கோரிக்கையை பிரதானமாக்காமல் சட்ட எரிப்புக்கான தண்டனையை அப்போதுதான் வடிவமைத்தனர்.

இருப்பினும் நவம்பர் 26, 1957 அன்று இந்திய அரசியலமைப்புச் சட்டம் பெரியார் மற்றும் திராவிடர் கழக தோழர்களால் கொளுத்தப்பட்டது.

இன்று அதே அரசியலமைப்புக்கு உட்பட்டு மனிதநேயம் இழிவாக்கப் பட்டுள்ளது. ஆன்மிகம், இந்துமதம் என்று "எச்சில் இலையில் உருண்டால் தோல் நோய் தீரும்" என்னும் மூட நம்பிக்கைகளைச் சடங்குகளின் மூலம் மக்களைப் பகுத்தறிவின்றி வாழச் செய்கிறார்கள்.

எப்போதெல்லாம் மதமும் அதன் மூட நம்பிக்கைகளும் சமூகத்தை இழிநிலைக்குத் தள்ள முற்படுகிறதோ அப்போது நாம் சுயமரியாதை, பகுத்தறிவு என்னும் மனிதநேய மாண்புகளை எதிர்திசையில் நிறுத்தி சமூகத்தின் மாண்பைக் காக்க வேண்டும்.

1784ல் "அறிவொளி என்றால் என்ன" என்ற கட்டுரையில் கேள்விகள் கேட்டு, தர்க்கம் செய்து பிறரின் தூண்டுதல் இல்லாமல் தன்னிச்சையான தெளிவான முடிவுகளைப் பகுத்தறிவோடு எடுப்பது தான் அறிவொளி என இம்மானுவேல் கன்ட் குறிப்பிடுகிறார்.

அறிவொளி பெற்ற சமூகமாய் இந்த மனிதத்தன்மையற்ற செயலை பண்பாட்டுத் தளத்திலும்,அரசியல் தளத்திலும் வெகுஜனப் போராட்டமாக மாற்றி இனிவரும் நாட்களில் இதே போன்ற மனிதத்தன்மையற்ற செயல்களைத் தலைதூக்காமல் செய்வது நம் கடமை.

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian